[1975 நவம்பர் 4

சென்னை-கோபால்ரெட்டி கண்டிகை பேருந்து வழித்தடம்

* 178 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 131-ஏ பேருந்துகள் சீராக சென்னையிலிருந்து கோபால்ரெட்டி கண்டிகை வரை ஓட்டப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், முறையாக ஓட்டுவதற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) எண். 131-ஏ (சென்னை-கரடிப்புத்தூர்) வழித்தடப் பேருந்து 1-2-1975-லிருந்து கோபால்ரெட்டி கண்டிகை வரை இப்போது முறையாக விடப் பட்டு வருகிறது. பாலவாக்கத்திற்கும் கரடிப்புத்தூருக்கும் இடையே உள்ள சாலை இதற்குமுன் பேருந்துப் போக்கு வரத்துக்கு ஏற்றதாக இல்லாததால், பாலவாக்கம் வரை மட்டுமே பேருந்து விடப்பட்டது. பின்னர் சாலை பேருந்துப் போக்கு வரத்துக்கு ஏற்ற நிலை பெற்றவுடன் 20—12—1974-லிருந்து கரடிப் புத்தூருக்கு மீண்டும் பேருந்து விடப்பட்டது. பின்னர் இவ்வழித்தடம் 1—2—1975-லிருந்து கோபால்ரெட்டி கண்டிகை வரை நீட்டிக்கப்பட்டது.

திரு. கா. வேழவேந்தன்: மேற்கண்ட பேருந்து கோபால் ரெட்டி கண்டிகைக்கு போகிறது என்றாலும் சில நேரத்தில் வசூலை மனத்தில் வைத்து பேருந்தை பாலவாக்கம் கிராமத்திலேயே நிறுத்தி விடுகிறார்கள். தொடர்ந்து அந்தக் கிராமத்திற்குப் பேருந்து செல்ல வேண்டுமென்ற வகையில் சிறப்பு ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தற்போது போய்க் கொண்டிருக்கிறது. சில நேரங்களில் போகாமல் இருக்கிறார்கள் என்றால், வசூலை அடிப்படையாக வைத்துப் போகாமல் இருக்கிறார் களா அல்லது பயணிகள் இல்லாமல் போகாமல் இருக்கிறார்களா என்பதுதான் கேள்வி. எல்லாக் கிராமத்திற்கும் எல்லா நேரங் களிலும் போய்க் கொண்டிருக்க முடியாது. இங்கு எதை வைத்துக் கொண்டு போகாமல் இருக்கிறார்கள் என்பதை நான் ஆராய்கிறேன்.